DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
STC-145/2019
Prosecution witness – PW.4

| | | |
|---|---|---|
| Name | :திரு.மகாலிங்கம் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1,A6 present. A2 to A5 absent. Petition U/s 317 Cr.P.C field and allowed)
**14.02.2024 – 03.35PM**
<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது விருதுநகர் மேற்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் கடந்த 21.03.2019 ம் தேதி பெருநாழி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது கடலாடி வட்டாட்சியர் அலுவலக நில அளவு பிரிவு வட்டத்துணை ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலையக் குற்ற எண்.22/2019 இ.த.ச பிரிவுகள் 147, 353, 294(பி), 506(1) ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

3. அன்றே 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனியசாமி மற்றும் கருப்பாயி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. பின்னர் சம்பவ சாட்சிகளான பாலமுருகன், திருமுருகன், மனோகரன், செந்தில்குமார், பொன்னுத்தேவர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர் எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் கைது செய்யப்படவில்லை.

6. அத்துடன் 11.04.2019ம் தேதி வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 353, 294(பி), 506(1)ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 5ம் எதிரியைத் தவிர இதர எதிரிகள் மூத்த குடிமக்கள் என்றால் சரிதான். 5ம் எதிரி பெண்மணியாவார். சம்பவ இடம் ஊருக்கு மத்தியில் உள்ளது என்றால் சரிதான்.

2. சம்பவ இடத்தை நான் பார்வையிட்ட போது பொதுமக்கள் சுமார் 10 நபர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்கள். மேற்படி பொதுமக்கள் யாரையும் இவ்வழக்கில் ஒரு சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

3. சம்பவம் நடந்த தேதியான 20.03.2019ம் தேதியன்று புகார் எதுவும் அளிக்கப்படவில்லை என்றால் சரிதான். வட்டாட்சியரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகலை விசாரணையின் போது என்னிடம் சமர்ப்பித்தார். அதை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

4. மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின் நகலையும் அ.சா.1 என்னிடம் சமர்ப்பித்தார். நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அ.சா.1 சம்பவ இடத்தை அளக்கச் சென்ற போது காவல்துறை அதிகாரிகளின் உதவியை நாடினார். சிறப்பு சார்பு ஆய்வாளரின் தலைமையில் 10 காவலர்கள் சம்பவ இடத்தை அளப்பதற்கு உதவியாக சம்பவ இடத்திற்கு சென்றிருந்தார்கள்.

5. அவர்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள பொன்னுத்தேவர் முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் என்றால் சரிதான்.

6. வட்டாட்சியர் உத்தரவின் பேரில் நோட்டீஸ் அனுப்பப்பட்ட ரவிச்சந்திரன் என்பவரை இவ்வழக்கில் ஒரு சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

7. சம்பவ இடத்தில் காவல்துறையை சேர்ந்த நபர்கள் இருந்ததால் சம்பவ நேரத்திலேயே எதிரிகளை கைது செய்ய வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

அவர்களை உடனடியாக கைது செய்யாததற்கு காரணம் எதுவும் உள்ளதா என்றால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்பதால் உடனடியாக கைது செய்யவில்லை.

8. எதிரிகள் 6 நபர்கள் மட்டும் சம்பவ இடத்தில் இருந்ததாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்பதால் தான் எதிரிகள் உடனடியாக கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

9. உண்மையிலேயே நான் கூறுவது போல் சம்பவம் நடந்திருந்தால் சம்பவ இடத்தில் 10 போலீசார் இருந்த நிலையில் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வர எதிரிகளை உடனடியாக கைது செய்திருப்போம் என்றும், அவ்வாறு கைது செய்யவில்லை என்பதால் நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

10. மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவினை உரிய காலத்திற்குள் நிறைவேற்றம் செய்யவில்லை என்பதால் அதற்கு காரணம் கூற வேண்டும் என்பதற்காக சம்பவம் நடந்தது போல் பொய்யாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் ஒரு சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

11. புகார்தாரர் அளித்த பொய்யான புகாரைப் பெற்று சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் ஆவணங்களை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.